REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் 4-ந் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	... ...	ரூ. 6
ஆறு மாதம்	... ...	ரூ. 12
ஒரு வருடம்	... ...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 21உ புதன் (3—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 22உ வியாழன் (4—4—57) [இதழ் 253

'எவரிடமிருந்து—எப்படி திராவிடத்தைக் காப்பது?'

'தீரா-விடம் எனப் பேசிய ஆச்சாரியார் இன்று திராவிடம் பற்றி கவலையுறுவானேன்?'

'எந்தக் காரணத்திற்காகவும் மூல இலட்சியத்தைக் கைவிட மாட்டோம்'

'17இலட்சம் மக்களின்குரலை சட்டசபையில் எதிரொலிக்கச்செய்வோம்'

'பொறுப்பை உணர்ந்து கழகத் தோழர்கள் பணியாற்ற வேண்டும்'

'மற்றவர்கள் நம்மை ஆராய்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது'

'தொண்டை நன்னாட்டில் பெற்ற ஆதரவை சேர - சோழ - பாண்டி நாட்டிலும் பெற உழைப்போம்'

சென்னைக் கடற்கரையில் அண்ணா தெளிவுரை

சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி 31—3—57-ல் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் முதல் பகுதி நேற்றைய இதழில் தரப்பட்டிருக்கிறது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

அப்பாவி அல்ல!

"இப்போது சிலர் ஒரு யோசனை சொல்லுகின்றனர்; வடநாடு—தென்னாடு; ஆரிய—திராவிடப் பிரச்சினைகள் இரண்டையும் விட்டுவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் வளரலாம் என்று கூறுகிறார்கள்.

"அழகி ஒருத்தியை மணமுடித்துத் தருகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை—முதலில் நீ செத்துவிட வேண்டும்; பிறகு உனக்கு அழகியை மணமுடிக்கிறேன்—என்பதுபோலிருக்கிறது, இந்த யோசனை! இதற்கு இணங்குவதற்கு அண்ணாதுரை ஒன்றும் அரசியல் அப்பாவி அல்ல!

கைவிடோம்!

"எதிர்க் கட்சியிலிருந்தாலும், வேறெந்தக் காரணத்திற்காகவும் நாங்கள், கழகத்தின் மூலாதாரமான இலட்சியத்தையும், கோட்பாடுகளையும் விட்டுவிடமாட்டோம் என்பதைத்; திட்டவட்டமாக அறிவிக்க;விரும்புகிறேன்.

இருவேறு கலாச்சாரங்கள்

"இந்த நாட்டில் ஆரிய கலாச்சாரம், திராவிடப்பண்பாடு என்ற வெவ்வேறான இரண்டு கலாச்சாரங்கள் நிலவுவதை யாரும் மறுக்கவில்லை. திராவிடப் பண்பாட்டினைக் கொண்டவர்கள்—அவர்களது மதம், சாதி எதுவாயினும் — அவர்கள் ' திராவிடர்களே!

திராவிட முன்னேற்றக் கழகம்

"நாங்கள், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றுதான் வைத்திருக்கிறோமே தவிர, 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்றுகூட அல்ல!

ஆரியரும் — திராவிடரும்

"நாங்கள், ஆரியரும் திராவிடரும் என்று பிரித்துப் பேசி துவேஷம் வளர்ப்பதாகக் கூறுகிறார்களே, அவர்களுக்குச் சொல்லுவேன்—'நாங்கள் முறைகளைக் கண்டிக்கிறோமே தவிர, நபர்களை அல்ல! இந்த உண்மையை, நான் 'ஆரிய மாயை' என்ற நூல் எழுதியதற்காகச் சர்க்கார் என்மீது தொடுத்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளே ஒப்பியிருக்கிறார்கள். மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒப்பியுள்ள இந்த உண்மை நாடறிந்த ஒன்றாகும்.

திராவிடமும் தீராவிடமும்

"திராவிடம் என்றால் 'தீராவிடம்' என்று பேசிய ஆச்சாரியாரே இப்போது 'திராவிடத்தைக் காப்போம்,' என்று எழுதியுள்ளார்.

"திராவிடத்தைக் காப்போம் என்றால், யாரிடமிருந்து காப்பது? எப்படிக் காப்பது? திராவிடத்திற்கு இப்போது என்ன ஆபத்து என்று விளக்கவேண்டாமா?

பாகிஸ்தான்

"பாகிஸ்தான் வேண்டுமென்ற போது, 'பாரதத்தை துண்டு போடுவதா? பசுவை வெட்டுவதா?'—என்று பேசிய ஆச்சாரியார், பின்னர் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்த ஒரே தலைவரானார்!

"'வேட்டியில் பொத்தல் விழுந்துவிட்டால் அதனை இரண்டாகக் கிழித்துவிடு உபயோகமான யோசனை' என்று கூறினார்; 'பாகிஸ்தான் கோருவது சரியே—தரத்தான் வேண்டும்' என்று துணிந்து பேசினார்!

அதுதானோ இது?

"அதுதானோ இது — என்று, நமது நெஞ்சு அடித்துக்கொள்கிறது!

பேதை நெஞ்சம்

"எனவே ஆச்சாரியார்—அந்தப் பெரியவர் — நல்லவர் —திராவிடத்தை யாரிடமிருந்து காப்பது? எப்படிக் காப்பது? ஆபத்து என்ன?—என்பதையெல்லாம், எனது பேதை நெஞ்சத்தை இன்னும் அலைக்கழிக்கவிடாமல், விளக்கிக் கூற வேண்டுகிறேன்.

காற்றினிலே வரும் கீதம்

"இந்தத் தேர்தல் நேரத்தில் நாடெங்கிலும் நமது தோழர்கள் முழக்கிய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய நாதம், ஆச்சாரியாருக்கு, காற்றினிலே வரும் கீதமாகக் கேட்டு, அவர் நெஞ்சில் நுழைந்துவிட்டது என்பதையே அவரது, 'திராவிடத்தைக் காப்போம்' என்ற எழுத்து கூறுகிறது.

17 இலட்சம் மக்களின் இதயம்

"சட்டசபையில், நாங்கள் அமர்ந்திருக்கிறோம் என்றால், எங்களுக்குப் பின்னால் 17 - இலட்சம் மக்களின் இதயம் இருக்கிறது என்பதை ஆட்சியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இனிய குரல்

"இனிய குரலில் ஒருவன் பாடினால்—உண்மையில் அவன் குரல் இனிமையாயிருந்தால் — அவனுக்கு முறைப்படி சங்கீதம் கற்றுத் தருவார்கள்; அவனும் கற்றுக்கொள்வான்.

"அதுபோல நாம், இதுகாறும் தன்னந் தனியாகப் பாடிக்கொண்டிருந்தோம். முறைப்படி சங்கீதம் கற்றுக்கொண்டவன் பக்க வாத்தியங்களுடன் பாடவேண்டியிருப்பதுபோல, சட்டசபைக்குச் செல்லும் நாம் பக்க வாத்தியங்களுடன்தான் பாடுவோம்.

ஒத்துழைப்பு

"பாடுவோருக்குப் பக்க வாத்தியங்கள் துணையாக இருக்க வேண்டும். ஆனால், பக்கவாத்தியங்கள், பாடும் பாட்டைவிட்டு விலகிச் செல்லுமானால், பாடகனின் தனிக்குரல் தவித்து ஒலிக்கத்தான் செய்யும்.

தோழர்களுக்கு:

"கழகத் தோழர்களுக்கு நான் மீண்டும் கூறுவேன். நமது வெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொண்டை நன்னாடு

"நம்மைப்பற்றி ம. பொ. சி. கூட ஆராய்ந்து கூறியிருக்கிறார். 'இவர்கள், பாண்டிநாடு—சேர நாடு—சோழநாடு இங்கெல்லாம் வெற்றிபெறவில்லை; தொண்டை நாட்டில்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்'—என்று.

"உண்மைதான்; அவருக்கு நான் ஒன்று கூறுவேன்—'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து,' என்ற பழமொழியை அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். பாண்டி நாடு—சேர நாடு—சோழ நாடு என்றுகூறியவர்கள், தொண்டை நன்னாடு என்று அடைமொழியுடன் கூறியிருக்கிறார்கள். சான்றோருடை தொண்டை நாட்டில் தி. மு. கழகத்திற்கு வெற்றி கிட்டியுள்ளது. இந்தச் சான்றோர், இதர நாடுகளிலும் வெற்றியைத் தேடித் தருவார்கள்.

வளருவோம்

"நமது தேர்தல் அனுபவங்கள் நமக்கு மேலும் வளர்ச்சியைத் தேடித் தரவும், பொறுப்போடு காரியமாற்றவும் நிச்சயம் பயன்படவேண்டும்"

இடை நடுவில் இந்த அறிவிப்பு ஏன்?

கான்பெர்ரா, எப். 2—

"காஷ்மீர் பகுதியில் தற்போதுள்ள இந்திய இராணுவம்—பாகிஸ்தான் துருப்புகளுக்குப் பதிலாக ஐ. நா. படையை நிறுத்த இந்தியாவும், பாகிஸ்தானும் இசைந்தால், ஆஸ்திரேலியா தன் துருப்புகளை அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறது" என்று ஆஸ்திரேலியாவின் அயல் நாட்டு அமைச்சர் ரிச்சர்டுகேசி அறிவித்துள்ளார்.

'அந்நியத் துருப்புகள் காஷ்மீரில் நுழைவதற்கு அனுமதிக்க இயலாது' என்று, இந்தியா அறிவித்திருப்பது, இந்த நேரத்தில் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

கேலிக் கூத்துதான்!

லாகூர், எப். 2—

"காஷ்மீர் பாகிஸ்தானுக்குக் கிடைத்தே ஆகவேண்டும்; இன்றேல், காஷ்மீரைப் பெறும் முயற்சியில் நாங்கள் செத்துமடிவோம்"

என்று, மாணவர்கள் கூட்டமொன்றில் பேசுகையில், பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி கூறினாராம்!

* * *

"காஷ்மீர் மீது யாராவது படையெடுத்தால் அவர்களுக்கு பஞ்சாப் அல்லது காஷ்மீரம், சமாதி கட்டப்படும் மயானமாகிவிடும்"

என்று, பஞ்சாப் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சர்தார் பிரதாப் சிங் கெய்ரான் விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளாராம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

14-4-57 ஞாயிறு அன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலையில் நடைபெறும்.

சென்னை 'அறிவகம்' 1—4—57 } தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—4—57 புதன்

மேனன் விளக்குவாரா?

இலங்கை அண்டை நாடு—அதனுடன் நட்புறவுடன் இருந்தாகவேண்டும் — அந்த நட்புக்குக் கேடு ஏற்படும் வகையில் இந்திய அரசாங்கம் நடந்துகொள்ளாது—இலங்கை வாழ் இந்தியர் (தமிழர்) பிரச்சினைக்கு முடிவு காண்பது எவ்வளவு முக்கியமானதோ, அதே போன்று முக்கியமானதுதான் இலங்கை—இந்தியர் நட்புறவும் என்று, குறிப்பிட்ட பணி பெற்றிராத அமைச்சர் கிருஷ்ணமேனன், மக்கள் சபையில் சில தினங்களுக்கு முன் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைவாழ் இந்தியர் (தமிழர்) பிரச்சினை குறித்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இருக்கும் சிக்கல் கடந்த பத்தாண்டுக் காலமாக நீடித்துக்கொண்டே வருகிறது. சிக்கலைத் தீர்க்க இந்தியாவும் முயற்சித்து வருவதாகத்தான், இப்பொழுது கூறப்படுவதுபோன்றே ஏற்கனவே பலமுறை கூறப்பட்டும் வந்திருக்கிறது. ஆனால், சிக்கல் மட்டும் தீர்ந்தபாடில்லை.

இலங்கை இந்தியர் (தமிழர்) பிரச்சினையிலுள்ள சிக்கல், துவக்கத்தில் தோன்றிய அளவுடன் இருக்கவில்லை. அந்தச் சிக்கலை மேலும் மேலும் கெட்டிப்படுத்தும் போக்கிலேயே இலங்கை இந்தியர் (தமிழர்)களுக்கு விரோதமான, விரும்பத்தகாத நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது இலங்கை ஆட்சி.

எப்படியும் இலங்கையில் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் தமிழ் மரபினரை, இலங்கைத் தீவிலிருந்து வெளியேற்றியே தீருவது என்ற அடிப்படைக் கருத்தில்தான் இலங்கை ஆட்சி—ஆட்சிப் பொறுப்பில் எவர் இருந்தாலும்—இதுவரை செயல்பட்டு வந்திருக்கிறது. முதலமைச்சர் கொத்தலாவலையாக இருந்தாலும், சமதர்மம் பேசக் கற்றுள்ள பண்டாரநாயகாவாக இருந்தாலும், இலங்கையில் இருந்துவரும் இந்திய (தமிழ்) மரபினரை விரட்டியடிக்கும் நோக்கத்தில் மாறுதல் அறவே இருப்பதில்லை.

இலங்கை ஆட்சியினரின் இக்கெடு நினைப்பை இந்தியப் பேரரசு, நம் அனைவரையும்விட மிகமிகத் தெரிந்தே இருக்கிறது. இருந்தாலும், இலங்கையில் வாழும் இந்திய(தமிழ்)மரபினரின் துன்பங்களைத் துடைக்க வேண்டுமே என்றத் துடிதுடிப்பு இந்தியப் பேரரசிற்கு இருப்பதாகக் காணோம்.

இலங்கையில் வாழ்ந்துவரும் இந்திய (தமிழ்) சந்ததியினரின் துன்பம் துடைக்கப்படுவதில் இந்தியப் பேரரசிற்கு அக்கரை இல்லாதிருப்பதைக்கூட அங்குள்ளோர் தாங்கிக்கொள்ளலாம். ஆனால், அங்கு தமிழ் சந்ததியினர் பட்டுவரும் துன்பத்திற்கும், இலங்கை-இந்திய நட்புறவிற்கும் ஒத்த மதிப்பு வைத்து இந்தியப் பேரரசு நடந்துகொண்டு வருவதாகவும், இனியும் அதையே பின்பற்றப் போவதாகவும் கிருஷ்ணமேனன் வெளிப்படையாகக் கூறியிருப்பதை, அங்குள்ள இந்திய (தமிழ்) மரபினர் ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள்-தாங்கிக்கொள்ளவும் மாட்டார்கள்.

கிருஷ்ணமேனன் கூறியுள்ளக் கருத்தைக் கொண்டு பார்க்குமிடத்து, இலங்கை நட்புறவைப் பேணிக் காப்பதற்காக, அத்தீவில் வதைபட்டு வரும் இந்திய (தமிழ்) மரபினரின் எதிர்காலத்தை விலைகூறவும் இந்தியப் பேரரசு தயக்கங் காட்டாது என்றே முடிவு கட்ட வேண்டியதாகிறது. இம்முடிவை துளியும் ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுத்துகின்ற நிலையில்தான், இலங்கை நேசத்தைப் பெறுவதற்காக, இந்தியப் பேரரசு மேற்கொண்ட செயல்முறைகளும் இருந்திருக்கின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள நமது யூகம் தவறானது எனக் கொள்வதானாலும், இந்தியப்பேரரசின் போக்கை அவ்வாறாக மதித்துத்தான் இலங்கை ஆட்சியினர், தம் நாட்டிலிருந்துவரும் இந்திய (தமிழ்) மரபினருக்குத் துன்பத்திற்குமேல் துன்பம் துணிந்து இழைத்து வருகின்றனர் என்ற உண்மையை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

நம் நேசத்தைப் பெறுவதற்காக, நம் நாட்டில் வாழ்ந்து வரும் இந்திய(தமிழ்)மரபினரை எவ்வளவு அல்லல்களுக்கு ஆளாக்கினாலும், அது பற்றி இந்தியப் பேரரசு ஆத்திரம் கொள்வதற்குப் பதிலாக அமைதியாக நடத்துகொண்டே தீரும். எனவே, நாம் எப்படியும் தமிழ் மரபினரைக் கொடுமைக்குள்ளாக்கலாம் என, இலங்கை ஆட்சியினர் தீர்மானித்துக்கொண்டுள்ளனர். அதற்கொப்ப செயல்பட்டும் வருகின்றனர்.

இலங்கைத் தீவில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் இலட்சக்கணக்கான இந்திய (தமிழ்) மரபினரின் குடிஉரிமை மனுக்கள் ஏற்கப்படுவதற்குப் பதிலாக தள்ளப்பட்டு வருகின்றன. இதன் பலனாக இவர்கள் அனைவரும் இலங்கைக் குடி மக்களாகவுமில்லாமல், இந்தியக் குடிமக்களாகவுமில்லாமல், 'நாடற்ற நாடோடி'களாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த நாடற்றவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டும் வருகிறது.

இவர்கள் அனைவரையும் இலங்கையை விட்டு விரட்டியடிப்பதற்குரிய தந்திரமான ஏற்பாடு ஒன்றை இலங்கை அமைச்சர் இப்பொழுது திட்டியுள்ளார். அப்புதிய ஏற்பாடு, இலங்கையில் இருந்துவரும் நாடற்ற இந்திய (தமிழ்) மரபினரில் தோட்டத் தொழிலாளர்களாக இருந்துவரும் பலரையும் தாக்கக் கூடியதாகும்.

இப்படி, அண்டை நாடான இந்தியாவிடம் பகை உணர்ச்சியுடன் தொடர்ந்து நடந்துகொண்டுவரும் இலங்கைத் தீவின் நட்புறவு, அங்கு வாழ்ந்துவரும் பல இலட்சக்கணக்கான இந்திய (தமிழ்) மரபினரின் துன்பத்தைவிட, துயரத்தைக் காட்டிலும் முக்கியமானதுதானா, காக்கப்பட வேண்டியதுதானா என்பதை, கிருஷ்ணமேனன்தான் விளக்க வேண்டும். அவர் விளக்குவாரா?

'நூற்றுக்கு 75 சோதனைகளில் கலப்படம் காணப்பட்டது'

நகரில் பால் விநியோக நிலை பற்றி பம்பாய் அதிகாரி

தலைகுனியவைக்கும் நிலையை மாற்றச் செய்ய வேண்டியது என்ன?

"கடந்த இரு தலைமுறைகளாக சென்னை நகரத்தில் விற்கப்பட்டுவரும் பாலின் தரம், படிப்படியாகக் குறைந்துவந்திருக்கிறது.

"சமீபத்திய வருஷங்களில் விநியோகிக்கப்படும் பாலில் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவற்றில், நூற்றுக்கு 66 முதல் 75 பங்கு வரை கலப்படம் செய்யப்பட்டிருந்தன என்பதைக் காண்கிறோம்.

"மேலும் வருத்தந்தரும் ஒரு உண்மை என்னவென்றால், கலப்படம் செய்தவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தின் சராசரி விகிதம் வரவரக் குறைந்துகொண்டே வந்திருப்பதாகும். முன்பு இந்தக் குற்றம் புரிந்தவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம் சராசரியாக ரூ. 40, ரூ. 43 என்று இருந்தது—இப்போது ரூ. 25 என்ற அளவுக்குக் குறைந்து வருகின்றது.

"மேலும், சென்னை நகரில் தரப்படும் பாலின் தரத்தைப் போலவேதான் இதர நகரங்களிலும், விநியோகிக்கப்படும் பாலின் தரமும் இருக்கிறது என்று கருதுகிறேன்.

"இந்த வருந்தத்தக்க நிலை குறித்து மக்கள் ஏதாவது கவலைப்படுகிறார்களா என்றுகூட கேட்கத் தோன்றுகிறது.

"ஒரு நகரத்தில் தரப்படும் பால் நூற்றுக்கு 70 மாதிரிகள், கலப்படமானவை என்று கூறப்படும் நிலை அமெரிக்கா, அல்லது ஐரோப்பாவில் உள்ள ஏதாவது ஒரு நாட்டில் இருந்தால், அங்குள்ள சுகாதார இலாகாவின் கதி என்ன ஆகுமோ தெரியாது.

"நமது நாட்டில் உள்ள சட்டங்கள், விதிகள் இவை எல்லாம் வேறெந்த நாட்டினுடைய சட்டத்திற்கும் குறைவானவை அல்ல; ஆனால், அவை அமுல் செய்யப்படுவதில்தான் குறை இருக்கிறது.

"பால் உற்பத்தி செய்பவர்களோ அல்லது வியாபாரிகளோ, அல்லது வாங்குபவர்களோ, இந்தக் கலப்படக்காரர்களிடமிருந்து பாதுகாப்புப் பெற முடியவில்லை. பால் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோரில் எவருக்கும் சுகாதாரம் பற்றிய கவலையே இருப்பதில்லை. இந்த நிலைகளை விளக்கும் புள்ளி விவரங்கள், நம்மை எல்லாம், தலைகுனியச் செய்கின்றன."

என்பதாக, பம்பாய் பால் கமிஷனரான டி. என். கூரோடி என்பார், சென்னை நகர பால் விநியோக நிலைகளை ஆராய்ந்த பின் கருத்தறிவித்திருக்கிறார்.

திறமை பெற்ற கலைஞர்களுக்கு

உபகார ஊதியமாம்!

புதுடில்லி, ஏப். 1—

ஓவியம், சிற்பம், நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளில் திறமை பெற்ற இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் துணை ஊதியம் கொடுக்க இந்தியப் பேரரசு முன்வந்திருக்கிறதாம்.

இக்கலைகளில் அவர்கள் மேலும் தேர்வு பெறுவதற்காக இரண்டாண்டுகளுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் துணை ஊதியம் அளிப்பார்களாம். இத்துணை ஊதியம் யாருக்கு அளிப்பது என்பதை இந்தியப் பேரரசின் கல்வித் துறைக் குழு முடிவு செய்யுமாம்.

சேதி, கேட்டீரா!

இரஷ்யப் பேரரசு, செஞ்சதுக்கத்திற்கு அருகில் 10 மாடிகள் கொண்ட மிகப் பெரிய கட்டடம் ஒன்று கட்டுவதற்கான வேலைகளை இந்த ஆண்டு துவக்குமாம். ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதான இக்கட்டடம் ஒரு ஓட்டல்தானம்!

இந்த ஓட்டலில் ஒரு பெரிய திரைப்படக் கொட்டகை—ஒரு உணவு விடுதி—ஒரு காபி ஓட்டல்—சில கடைகள்—உட்புறம் நீண்ட சதுரமான இடத்தில் நாடக, இசை அரங்கு இத்தனையும் இருக்குமாம்!

மேலும் இந்த ஓட்டலில் 2,700 அறைகளும், 600 இருக்கைகளும் உண்டாம்.

மலேயா தமிழர் தலைவர் வேண்டுகோள்

கோலாலம்பூர், ஏப். 1—

மலேயாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும், செட்டில்மெண்டிலும் குறைந்தது ஒரு தமிழ் உயர்நிலைப் பள்ளியாவது நிறுவ வேண்டும் என்று மலேயா அரசாங்கத்தை, தமிழ்த் தலைவர் பழனிவேலு கேட்டுக்கொண்டுள்ளார்.

வடநாட்டிலேயே மற்றொரு தொழிற்சாலை

செயற்கை இரப்பர் உற்பத்தித் திட்டம் உ. பி. மாநிலத்தில்தானும்!

வடநாட்டிலுள்ள உத்திரப் பிரதேச மாநிலத்தில், செயற்கை முறையில் இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான பேச்சு வார்த்தைகள் முடிந்துவிட்டனவாம்.

இரண்டாவது திட்டத்தில் 20,000 டன் இரப்பர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதைச் சரிக்கட்டவே இந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுகிறதாம்.

தேர்தலுக்குப் பிறகு டில்லியின் கைவிரிப்பு!

ஊதிய நிர்ணயக் குழு அமைக்க இயலாதாம்!

50,000 பேர் வற்புறுத்திய கோரிக்கையின் கதி!

கல்கத்தா, ஏப். 1—

கடைசியாக நியமிக்கப்பட்ட ஊதிய நிர்ணயக் குழுவின் சிபாரிசுகளின்படியே அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி தரப்பட்டு வருகிறது.

இடையில் விலைவாசி உயர்வால், நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி, நாடு முழுவதும் அரசாங்க ஊழியர்கள் 'புதிய ஊதிய நிர்ணயக் குழு' அமைத்து, நிலைமையை ஆராய்ந்து, கிராக்கிப்படியில் உடனடியாகப் போதிய உயர்வுதர வேண்டும் என்று குரலெழுப்பி வருவது தெரிந்ததேயாகும்.

சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்களில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 50,000 மத்திய அரசாங்க ஊழியர்கள் இந்தியத் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் மனு செய்துக் கொண்டனர்.

அவர்களின் கோரிக்கையைப் பரிசிலனை செய்ய நாட்கள் பல கடந்தபின், 'ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கில்லை' என்று மத்திய அரசாங்கம் இப்போது முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மேற்கு வங்க மத்திய அரசாங்க ஊழியர்கள் சங்கத்தின் இணைப்புக் கமிட்டியின் பொதுச்செயலாளர் அரசாங்கத்தின் முடிவைக் கண்டித்துள்ளார்.

பிச்சைக்காரர்களைப் பாதிக்கும்

டில்லி சீர்திருத்தம்!

விசயவாடா, ஏப். 1—

தசாம்ச நாணயம் (புதிய காசு) அமுலாக்கப்பட்டதன் விளைவாக பிச்சை எடுத்துப் பிழைப்பவர்களுக்கும் ஏமாற்றத்தை உண்டாக்கியுள்ளது!

"முன்பெல்லாம் 64 பேரை அணுகினால் ஒரு ரூபாய் கிடைக்கும்; இப்பொழுது 100 பேரை அணுகவேண்டியுள்ளது" என்று ஒரு பிச்சைக்காரர் வருத்தத்துடன் தெரிவித்ததாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது!

தென் சுமத்திராவில் எதிர்ப் புரட்சி?

ஜாகர்த்தா, மார்ச் 31—

தென்சுமத்திராவில் அதிகாரிகள் பலர் இராணுவ ஆட்சியை ஒழிப்பதற்குச் சதி செய்ததாகவும், அவர்களுடைய முயற்சி தகர்க்கப்பட்டு விட்டதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலைநகரிலிருந்து வெளியேறிவிட்டனர் என்றும், சுமத்திராவின் படைத் தளபதி அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் அறிவைக் கண்டு அஞ்சுவதாகப் பிரகடனம்?

பத்திரிகைக் கட்டுப்பாடு மசோதா பற்றி இலங்கை இதழின் கண்டனம்

கொழும்பு, ஏப். 1—

அரசாங்க இரகசியங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டுவிடுகின்றனவாம். இதைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம், சட்டம் ஒன்றைக் கொண்டுவருவது பற்றி பரிசீலனை செய்துவருகிறதாம். இந்த வாரம் நடைபெறவிருக்கும் அமைச்சரவை இதுபற்றி முடிவு செய்யுமாம்.

அரசாங்க இரகசியங்கள் வெளியிடும் பத்திரிகைமீது நடவடிக்கை எடுத்து, 'ஓராண்டுக்காலம் சிறைத் தண்டனை அல்லது ரூ. 10,000 அபராதம்; அல்லது இரண்டும் விதிக்க இந்த மசோதா வசதி செய்யுமென்று இதழ் ஒன்று செய்தி தந்திருக்கிறது.

"இந்த மசோதாவை மந்திரி சபை ஏற்காது என்று நம்புகிறோம்; அவ்வாறு ஏற்றால், அது பாசிஸ்டுத்தன்மை வாய்ந்ததென்றும், பிற்போக்கானதென்றும் பொதுமக்களின் அறிவைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகின்றது என்று தனக்குத்தானே பிரகடனம் செய்துகொள்வதாகும்" என்று, செய்தியை வெளியிட்டுள்ள 'மார்னிங் டைம்ஸ்' என்ற அந்த சுயேச்சை இதழ் தன்னுடைய தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

கோவையிலும் சென்னையிலும்

தொழில் மன்றங்கள்

எல்லைகள் நிர்ணய விளக்கம்

சென்னை, ஏப். 1—

தொழில் தகராறு சட்டத்தின் கீழ் சென்னையிலும் கோவையிலும் இரண்டு தொழில் மன்றங்கள் நியமனமாகியுள்ளன.

கோவை, சேலம், நீலகிரி, வட ஆற்காடு மாவட்டங்கள் கோவை மன்றத்தின் அதிகாரத்தின் எல்லைக்குள் இருக்கும்.

மற்ற மாவட்டங்கள் சென்னை மன்றத்தின் எல்லைக்குள் இருக்கும்.

சென்னையிலுள்ள தொழில் மன்றத்திற்கு நீதிபதி கே. இராமசாமி(கவுண்டர்) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோரப் பசிக்கு இன்னும் எத்தனை பேர் இரையாக வேண்டும்?

ஏகாதிபத்தியவாதிகளின் கொலை பாதகம் உச்சம் பெறுகிறது

அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரரின் கொடூர அடக்குமுறைகள்

அல்ஜீயர்ஸ், ஏப். 1—

கொடுங்கோன்மையின் உச்சத்தை வேகமாகத் தொட்டுக் கொண்டிருக்கின்றனர், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

ஈவு இரக்கமில்லாது படுகொலைபுரிவதில் தங்களுக்குத் தாங்களே நிகர் என்ற பெயர்பெற, அல்ஜீரிய மக்களை பலிகொண்டு வருகின்றனர், தினம், நூற்றுக்கணக்கில்!

ஒரே வாரத்திலாம்!

ஒரே வாரத்தில் பிரெஞ்சு ஏகாதிபத்திய இராணுவத்தினர். அல்ஜீரிய தீவிரவாலகளை அடக்குகிறோம் என்ற பெயரில், 806 பேர்களைப் படுகொலைபுரிந்ததாகக் கணக்குத் தருகின்றனர்.

100 பிணங்கள்

நேற்று முன்தினம் மட்டும் இந்தக் கொலை பாதகர்கள், 100 அல்ஜீரியர்களைப் பிணமாக்கினர் என்றும் செய்தி தரப்படுகிறது.

கோரப் பசி!

இரத்த வெறிகொண்டலையும் இந்த ஏகாதிபத்தியவாதிகளின் கோரப் பசிக்கு, ஒரு பாவமும் அறியாத — விடுதலை கோருவதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் புரியாத அல்ஜீரிய மக்களில் இன்னும் எத்தனைபேர் இறையாக வேண்டுமோ?

இந்தியப் பேரரசின் அமைச்சர் இலாகாக்களின் திறமைக் குறைவு?

திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் தொகைகள் சரிவர செலவழிக்கப்படாததற்குக் காரணம்?

புதுடில்லி, மார்ச் 31—

"இந்தியப் பேரரசின் அமைச்சர் இலாகாக்கள், பல்வேறு காரியங்களுக்காக ஒதுக்கப்படும் தொகையை சரியான முறையில் செலவிடாமலும், மிகுதியாக்குவதாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளும், தாமும் குறைந்துவிடுகிறது" என்று, மக்கள் சபையின் பொதுக் கணக்குக் குழு, குறிப்பிட்டிருக்கிறது.

திட்டத்தின் செலவுகளை சரியானபடி மதிப்பிடவேண்டுமென்றும், மதிப்பிடும்போது கொஞ்சம் கூடுதலாகவே நிர்ணயிப்பது நல்லதென்றும் அது சுட்டிக்காட்டியிருக்கிறது.

தேவைச்கு மேல் பணம் ஒதுக்கப்பட்டிருந்தும், அத்தொகை செலவிடப்படாமல் மிகுதியானதற்குச் சில உதாரணங்களையும் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

"1952—53-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட துணை மானியக் கோரிக்கைகளுச்கு ரூ. 479 இலட்சம் ஒதுக்கப்பட்டது; ஆனல் அதில் ரூ. 285 இலட்சம் உபயோகிக்கப்படாமல் மிகுதியாகிவிட்டிருக்கிறது.

"உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும், சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூ. 14¼ கோடி முழுமையிலும் செலவிடப்படவில்லை; ரூ. 6½ கோடி இந்தத் தொகையில் மிகுதியாகிவிட்டிருக்கிறது."

'அரசியல் சட்டத்திற்கு விரோதமாக நடக்கிறது இன்றைய சர்க்கார்'

அரக்கோணம் வட்ட கிராம அதிகாரிகள் மாநாட்டில் குமுறல்

அரக்கோணம், மார்ச் 27—

"இன்றைய ஆட்சி கிராம அதிகாரிகளுக்கும் — மக்களுக்கும் விரோத மனப்பான்மையை உண்டுபண்ணுகிறதே தவிர வேறு பலன் ஒன்றுமில்லை. இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமாக, கிராம அதிகாரிகளின் ஊதியம் இருக்கிறது. ஆட்சியாளர், கிராம அதிகாரிகளின் ஊதியத்தை உயர்த்தாவிடில், பொதுத் தேர்தலில் ஆதரவு பெற முடியாது என்று அறிந்த பின்னர்தான் பிரயாணப்படி - கல்வி - மருத்துவ வசதி முதலிய சலுகைகள் வழங்கினர்கள்; குறையைப் போக்குவதற்கல்ல. சுதந்திரம் கிடைத்த பிறகு கிராம அதிகாரிகள் புறக்கணிக்கப்பட்டு, கீழ்நிலையை மேலும் - மேலும் உண்டாக்கிவிட்டார்கள்," என்று, திரு. பி. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரக்கோணம் வட்ட கிராம அதிகாரிகள் மாநாட்டில், மேற்படி வட்ட கிராம அதிகாரிகள் சங்கச் செயலாளர் தோழர் ஏ. சி. இராமநாதன் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்.

மற்றும் கிராம அதிகாரிகளின் நிலையை தோழர் சு. வே. இராமையா, கிராம அதிகாரிகள் சங்கத் தலைவர் வெங்கடாரசு முதலியோர் சொற்பொழிவாற்றினரென்றும், மாநாட்டில் 500-க்கு மேற்பட்ட கிராம அதிகாரிகள் கலந்துகொண்டனரென்றும் தெரியவருகிறது.

தையற் தொழில் நிலையம் திறப்பு

இரா. நெடுஞ்செழியன் பாராட்டு

31-3-57 காலை 10 மணியளவில், சென்னை—புரசவாக்கம் நெடுஞ்சாலை, 2/132 எண்ணுள்ள கட்டிடத்தில், அரசியலார் சான்று பெற்ற தையற்கலை வல்லுநர் தோழர் கே. பி. சுந்தரம் அவர்களின் 'தையற் தொழில் நிலையத்'தை, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழின் அவர்கள் திறந்துவைத்து, தமிழில் முதன் முதலாக 'தையற் தொழில் பயிற்சி' நூல்கள் எழுதிய தோழர் கே. பி. சுந்தரத்தின் திறமையை பாராட்டினர்.

இவ்விழாவிற்குத் தோழர் என். ஆர். சடகோபன் தலைமை வகித்தார். தோழர் க. அன்பழகன் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. கா. அப்பாதுரையார் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பெற்றது.

அமெரிக்கப் பாதையில் பிரிட்டனும் செல்கிறது!

ஐ. நா. தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள 6 அம்சங்களையும், கால்வாய் உபயோகிப்போரின் நலனையும் கவனிக்காத எந்தத் தீர்ப்பையும் அமெரிக்கா ஏற்காது என்றும், எனவே, அமெரிக்காவின் முயற்சி வெற்றி தரும்வரை பிரிட்டிஷ் கப்பல்கள் சூயஸ் கால்வாயை உபயோகிக்கக் கூடாது என்று கப்பல் சொந்தக்காரர்களுக்கு தான் யோசனை கூறியுள்ளதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் தெரிவித்தார்.

மீனிலிருந்து மாவு!

குழந்தைகள் உணவாகும்

திருவனந்தபுரம், மார்ச் 31—

97 சதவிகிதம் புரத சத்துள்ள வாசனையற்ற மீன் மாவைத் தயார் செய்யத் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தின் மீன், உயிர் நூல் நிபுணர்கள் வழி கண்டு பிடித்திருக்கின்றனர்.

ஆறு அவுன்ஸ் பாலில் உள்ள புரத சத்தைவிட அதிக சத்து, இந்த மாவின் 10 கிராமில் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறர்கள்.

காற்று பட்டால் இந்த மாவு கெடுவதில்லையாம்.

குழந்தைகள் இதை உண்ணுமாறு செய்வதற்காக இதை பிஸ்கட்டில் சேர்க்க முயற்சி செய்யப்பட்டது.

டென்மார்க் நாடு போர்க்களமாகும்?

நார்வே நிலைமை என்ன?

கோபன்ஹேகன், ஏப். 1—

"ரஷ்யாவுக்கு எதிராக டென்மார்க் நாட்டிலுள்ள இராணுவத் தளங்கள் பயன்படுத்தப்படுமானல், இரஷ்யா டென்மார்க் நாட்டைத் தாக்கும்" என்று, இரஷ்யப் பிரதமர் புல்கானின் எச்சரித்துள்ளாராம்.

இவ்வாறே நார்வே நாட்டுப் பிரதமரையும் அண்மையில் ரஷ்யப் பிரதமர் கடிதம்மூலம் எச்சரித்துள்ளாராம்.

இந்த இரு நாடுகளும் 'நேட்டோ' மாநாட்டில் கலந்துகொண்டதே இதற்கு காரணம் என்று கருதப்படுகிறது.

"டென்மார்க்கின் தளங்கள் இரஷ்யாவைத் தாக்கப் பயன்படுத்தப்படும் நிலைமை எற்படுமேயானல், டென்மார்க் போன்ற நாடுகள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவே ஆகும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் பொது மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளருக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உலக நாடுகளின் எதிர்ப்பு உதாசீனம்!

அணுசோதனைகளைக் கைவிடுவது அடிப்படைக் கொள்கையைக் கைவிடுவதாகுமாம்

அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துமாறு உலகம் முழுமையிலிருந்தும், கண்டம்—எதிர்ப்புகள் இருந்தபோதிலும் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தும் உத்தேசத்தைக் கைவிடுவதற்கு பிரிட்டன் தயாராக இல்லை என்பது தெளிவாகியுள்ளது. ஜப்பான் பிரதமர் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

"கிறிஸ்துமஸ் தீவுகளில் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தப் போகும் சோதனைகளைக் கைவிடுமாறு இந்தச் சபைக்கு நான் சிபாரிசு செய்யமாட்டேன்; சோதனைகள் நடைபெறும் பகுதிக்கு வெளியே அணுக் கதிரியக்கம் பாவாது" என்று பிரிட்டிஷ் பிரதமர், காமன்ஸ் சபையில் இறுதியாகக் கூறிவிட்டார்.

"சோதனைகளைக் கைவிடுவது, பிரிட்டனின் கொள்கைக்கே அடிப்படையாக உள்ள பாதுகாப்புத் திட்டத்தைக் கைவிடுவதாகும்; என்றென்றைக்கும் நம்மை பலவீனமாக்கிக் கொள்வதாகும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

★

ரஷ்யா நிராகரிப்பு

முன்னறிவிப்பு இல்லாமலேயே ரஷ்யா தொடர்ந்து நடத்தும் அணுகுண்டு சோதனைகளை ஆட்சேபித்து ஜப்பான் அனுப்பியிருந்த குறிப்பை ரஷ்யா நிராகரித்திருக்கிறது.

தங்கள் எல்லைக்குள்ளேயே தான் இந்தச் சோதனைகளை நடத்துவதாகவும், இதனல் ஜப்பானியர்களுக்கு எவ்விதச் சேதமும் எற்படவில்லையென்றும், ஆனல், மேல் நாடுகள் இந்தச் சோதனைகளை நிறுத்தினல் தாங்களும் நிறுத்திவிடத் தயாராக இருப்பதாக ரஷ்யா கூறியிருக்கிறதாம்.

இரஷ்யா செல்லும் தமிழ்ப் பேராசிரியருக்குப் பாராட்டு

25-3-57 மாலை 5-30 மணிக்கு சென்னை 'தாசப் பிரகாஷ்' உணவு விடுதியில், இரஷ்ய நாட்டின் சில அமைச்சுத்துறையில் மொழி பெயர்ப்பாளராக செல்லும் புதுக்கோட்டை, மன்னர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு. எஸ். என். சொக்கலிங்கம் அவர்களைப் பாராட்டி ஒரு விழா நடைபெற்றது. விழாவிற்கு சென்னை மாநில பொதுக் கல்வி இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமைவகித்தார். தோழர் வீ. சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்தினர். பேரம்பாக்கம் போர்டு பள்ளி தலைமையாசிரியர் திரு எஸ். வடிவேல், தொ. ம. து. வே. உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு. ந. சண்முகம், திரு சொக்கலிங்கம், மு. வரதராசனுர் ஆகியோர் பாராட்டிப் பேசினர். திரு எஸ். என். சொக்கலிங்கம் தனக்களித்தப் பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

அதிருப்தியின் எதிரொலி?

சென்னை, மார்ச் 31—

29-3-57-ல் நடைபெற்ற திருவத்திபுரம்—செய்யார் பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில், அந்தத் தொகுதியில் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம். எல். ஏ.,வைப் பாராட்ட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்தை பஞ்சாயத்து போர்டு உறுப்பினர் தோழர் சரவணன் முன்மொழிந்தார். விவாதத்திற்கு பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில் தீர்மானம் தோல்யுற்றது.

பஞ்சாங்க வரலாற்றில் சில கட்டங்கள்!

புராதன ரோம் சாம்ராஜ்யத்தில் ஜூலியஸ் சீசர், பஞ்சாங்கச் சீர்திருத்தம் செய்வதற்குமுன், வருடப் பிறப்புப் பற்றி கொம்பு ஊதி அறிவித்தார்கள்.

ஜூலியன் காலண்டர் பஞ்சாங்கத்தில் புகுந்துவிட்ட பிழையைத் திருத்துவதற்காகக் குறிப்பிட்ட ஒரு வருடத்தில் அதிகப்படியாய் 67 தினங்களைச் சேர்க்க வேண்டியிருந்தது.

1582-ல், போப் 13-வது கிரிகோரி செய்த பஞ்சாங்கச் சீர்திருத்தத்தின் மூலம்தான், கிரிகோரியின் வருட அளவு, இயற்கை வருட அளவுக்கு மிகவும் நெருக்கமாக்கப்பட்டது.

இங்கிலாந்தில், கிரிகோரியன் பஞ்சாங்கத்தை முதன்முதலாக ஏற்றுக்கொண்டபோது அந்த வருடத்தில் 12 தினங்களை விட்டுவிட நேர்ந்தது; அதற்குமுன் சேர்ந்திருக்த பிழைகளைச் சரிக்கட்டுவதற்கு அப்படிச் செய்ய நேர்ந்தது.

புதிய இந்தியப் பஞ்சாங்கத்துக்கு அடிப்படையாக உள்ள 'சக சகாப்தம்', கி. பி. 587-ல் மரணமடைந்த பிரபலவான இயல்நிபுணர் வராகமிகிரர் காலம் முதல் இந்தியாவில் பரவலாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

புதிய பஞ்சாங்கத்தில், விழா நாட்கள் இனிமேல் தள்ளிப் போகமாட்டாதாம்! ஏற்கனவே அவை, நிகழ்ச்சிகளைக் கவனிக்காமல்விட்ட பிழைகளினல் 23 நாட்கள் தள்ளிவிட்டனவாம்! இன்னும் 1,000 வருடங்களுக்கு அவை அவ்வாறு விடப்பட்டிருந்தால், ஆடி, ஆவணி மாதங்களாகிய பருவமழைப் பட்டம் குளிர்காலத்தில் வந்துவிடுமாம்!

பி. & சி. ஆலை தி.மு.க.

தோழர்களுக்கு:

மேற்கண்ட ஆலை தி. மு. கழக தோழர்கள் சார்பில், தமிழகத்தில் வெற்றிபெற்ற தி. மு. கழக எம். எல். ஏ., எம். பி. தோழர்களுக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்வதால் நன்கொடை வசூலிக்கும் தோழர்களிடம் நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று பி. அண்டு சி. ஆலை தி. மு. கழகத் தேர்தல் குழு செயலாளர் தோழர் க. சுப்பிரமணி அறிவிக்கிறர்.

தேர்தல் நிதி

தி. மு. க. தேர்தல் நிதிக்காக பம்பாய் கொலாபா கிளை ரூ. 70; லாக்பாக் தோழர் சுப்ரமணியம் அவர்கள் மூலம் இரண்டாம் முறையாக ரூ. 15—8—0; ஆக ரூ. 85—8—0 வரப்பெற்றேம்.

[ஏற்கனவே அனுப்பித்தந்த ரூ. 1313—2—0வுடன் மேற்கண்டத் தொகை ரூ. 85—8—0வும் ஆகமொத்தம் ரூ. 1398—10—0 ஆகிறது.]

* * *

சேலம் மாவட்டம்-சேந்தமங்கலம் தொகுதி-வடுகப்பட்டி கிராம தி. மு. க. ஆதரவாளர்கள் தேர்தல் நிதிக்காக அளித்த ரூ. 5—8—0-ம், சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் மூலமாக வரப்பெற்றேம்.

* * *

ஒரு திருத்தம்

23—3—57 இதழில் வெளியாகியுள்ள, தேர்தல் நிதியில் சென்னை—வண்ணை (பேசின் பிரிட்ஜ் ரோடு) தோழர் 'டி. மாசிலாமணி அவர்கள்' என்றிருப்பதை தோழர் 'த. மாசிலாமணி அவர்கள் மூலம் மேற்கண்ட ரோடிலுள்ள சென்னை கூட்டுறவுச் சங்க நெசவாலையின் தொழிலாளர்கள் சார்பில்' என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறேம்.

நெருக்கடி ஏற்படுமென்று அஞ்சிய வேலைநிறுத்தம் நின்றுவிட்டது

வாக்களிப்பு மூலம் தொழிலாளர் தங்கள் முடிவைத் தெரிவித்தனர்

இரண்டரை கோடி பவுன் வருமானத்தைத் தொழிலாளர்கள் இழந்துவிட்டனராம்!

லண்டன், எப். 2—

10 சதவிகிதம் ஊதிய உயர்வு கோரி கப்பல் கட்டும் தொழிலாளர்கள், பொறியியல் ஊழியர்கள் பிரிட்டனில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது அறிந்த ஒன்றாகும்.

மூன்றுவார காலமாக நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்தில் 17 இலட்சம் பேர் ஈடுபட்டனர்; மேலும் பல இலட்சக்கணக்கானோர் சேரக்கூடும் என்றும், பிரிட்டனில் பெரிய தொழில் நெருக்கடி ஏற்படக்கூடும் என்றும் அஞ்சப்பட்டது.

லண்டன் நகர மண்டபத்தில் கப்பல் கட்டும் தொழிலாளர் சங்கமும், பொறியியல் சங்கத்தின் பிரதிநிதிகளும்கூடி ஒரு மாநாடு நடத்தினர். கம்பெனி நிர்வாகிகள் ஊதிய உயர்வு சம்பந்தமாக நேரடிப் பேச்சு வார்த்தை நடத்த கடைசி நேரத்தில் சம்மதித்துள்ளதைக் கொண்டு, இந்த பெரிய வேலை நிறுத்தத்தை 'வாபஸ்' பெறவேண்டும் என்று சிலர் வற்புறுத்தினர்; வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக 4,49,162 வாக்குகளும், எதிராக 7,10,177 வாக்குகளும் கிடைத்தன; எனவே, வியாழன் முதல் மீண்டும் எல்லோரும் வேலைக்குத் திரும்பிச் செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த வேலை நிறுத்த காலத்தில் தொழிற் சங்கங்கள், தொழிலாளருக்கு ஊதியமாக 60 இலட்சம் பவுன் வழங்கியுள்ளனவாம்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தங்கள் கூலிகளின் மூலமாக 2½ கோடி பவுன்களை இழந்துவிட்டனராம்!

வேலை நிறுத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நஷ்டத்தின் மதிப்பீட்டைத் தொழிலதிபர்கள் கணக்கிட முடியவில்லையாம்.

அமைச்சர்கள் விருப்பத்திற்கு

நிதி ஒதுக்கத் தடை!

ஐதராபாத், எப். 2—

தனிப்பட்ட முறையில், தங்கள் விருப்பப்படி அரசாங்கப் பணத்தை—அது சிறிய தொகையானாலும்கூட, உதவி நிதி என்று அளிக்கும் முறையை அமைச்சர்கள் கைவிட்டுவிட வேண்டும் என்றும், உதவி நிதிக்கான பிரச்சினையை அரசாங்கம் தக்க பரிசிலனை செய்த பின்னரே பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும், ஆந்திர மாநில அமைச்சரவை முடிவு செய்திருக்கிறதாம்.

சம்பந்தப்பட்ட இலாகாவினரையும் கலந்து ஆலோசித்த பின்னரே இதுபற்றி முடிவு செய்ய வேண்டுமென்றும், அமைச்சர்கள் இஷ்டம்போல் பொதுமக்களின் பணத்தைச் செலவிட ஆந்திர அரசு இடம் தரவில்லை என்பதையும் முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி, பள்ளி ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பாராட்டுக் கூட்டம்

4—4—57 மாலை 6-மணிக்கு, சென்னை 34-வதுவட்ட தி. மு. கழக சார்பில், நுங்கம்பாக்கம்—வள்ளுவர் திடலில், தோழர் வ. சங்கரநாராயணன் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தி. சு. கிள்ளிவளவன், கா. மு நகேசனார் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணா சுற்றுப்பயணம்

ஏப். 4: மேனூர்
6: களம்பூர்
7: சென்னை — காலை: திருமணம்
மாலை: திருவல்லிக்கேணி கூட்டம்
17: நெல்லிக்குப்பம்—திருமணம்
18: விருத்தாசலம்—பொதுக் கூட்டம்.

நன்றியறிவிப்பு

தேர்தலில் திருவல்லிக்கேணி சட்டசபைத் தொகுதியில் போட்டியிட்ட எனக்கு தன்னலம் கருதாமல், ஓய்விலா உழைப்பு, பொருள் ஆகிய எல்லாவற்றையும் ஈடுபடுத்தி, பல கஷ்டநஷ்டங்களை ஏற்றுப் பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், பொது மக்களுக்கும் எனது இதயங்கனிந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதுடன், கண்ணியம் வளரவேண்டும்—ஜனநாயகம் ஓங்கவேண்டும் என்ற உயரிய நோக்கோடு 11,975 வாக்குகள் அளித்து என்னையும், உதயசூரியன் சின்னத்தையும் பெருமைப்படுத்திய திருவல்லிக்கேணி வாக்காளப் பெருமக்களுக்கு எனது உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் உரியதாக்குகிறேன். வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!

அன்பன்
க. அப்பாத்துரை

தானே இயங்கும் 'ராக்கெட்' குண்டுகள்

ரஷ்யா உருவாக்குகிறதா?

வாஷிங்டன், எப். 2—

வெகுவிரைவில், தானே இயங்கும் நடுத்தரமான ஆயுதங்களைப் பெரும் அளவில் உற்பத்தி செய்ய ரஷ்யா முனையுமாம்!

சுமார் 1,000 மைல்களுக்குள் இருக்கும் நாடுகளைத் தாக்கக்கூடிய 50 ராக்கெட் குண்டுகளை ரஷ்யா பரிசோதித்திருக்கிறதாம்.

இருக்குமிடத்தில் இருந்து கொண்டே சோவியத் படையினர் பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளைத் தாக்குவதற்கு இவைகள் பயன்படக்கூடுமாம்.

இந்தத் தகவலை அமெரிக்காவின் முன்னாள் விமான மந்திரி செனட் சபையில் தெரிவித்தாராம்.

அழிவுச் சோதனையை மறைக்கக் கருவியாம்!

விஞ்ஞானிகள் உருவாக்குகின்றனர்

லண்டன், எப். 1—

உலகத்தில் எங்கிருந்துமே அணு ஆயுதச் சோதனைகளைக் கண்டுபிடிக்க முடியாத கருவிகளைப் பிரிட்டனில், விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனராம்!

இந்தக் கருவிகள், மத்திய சைபீரியாவில் இருந்தாலும்கூட கண்டுபிடிக்க முடியாதாம்!

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனும், அயல் நாட்டு அமைச்சர் செல்வின் லாயிடும் காமன்ஸ் சபையில் இத்தகவலை வெளியிட்டனராம்.

மந்திரிசபை அமைக்கும் முயற்சியில் தோல்வியை அணைத்துக் கொண்டாராம்!

இனி குடியரசுத் தலைவரே 'செயலில்' இறங்குவாராம்

ஜாகர்த்தா, எப். 2—

இந்தோனேஷியாவின் தேசியக் கட்சித் தலைவர் சடந்த ஒரு வார காலமாக முயற்சி செய்தும்கூட அமைச்சரவை அமைக்கும் முயற்சியில் தோல்வியை அணைத்துக்கொண்டாராம்! இதனால் இந்தோனேஷியாவில் புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், தலைவர் சுகர்னோவே 'செயல்பட' வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்



சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்து கொள்ள

கடைசி தேதி: 9—4—57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

★★★★★★★★★★★★★★★★★★

நடன நாடகம்!

6-4-57 சனி மாலை 6-30 மணிக்கு கோகலே மண்டபத்தில்

இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில்

குமாரி

ஈ. வி. சரோஜா

பங்கேற்கும்

நடன நாடகம் நடைபெறும்

★

நன்கொடை: ரூ. 3, 2, 1

குறிப்பு: நுழைவுச் சீட்டுகள் இராயபுரம் 'அறிவக'த்தில் கிடைக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டம்

★

குன்றத்தூர்:

5—4—57 மாலை 6-மணிக்கு

தலைவர்: டி. என். சம்பந்தம்

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
க. அன்பழகன்

ஐந்து மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகள்

ரூ. 6½ கோடி செலவாகும்

கோவை, எப். 2—

இந்த ஆண்டு ஜூன் திங்கள் முதல் 5 புதிய மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறதாம்; இதற்கு ரூ. 6½ கோடி செலவாகுமாம்.

இந்தப் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசாங்கம் 75 சதவிகிதம் மொத்த செலவையும், 50 சதவிகிதம் ஆண்டுதோறும் ஏற்படும் செலவையும் ஏற்றுக்கொள்ளுமாம். மற்றச் செலவுகளை மாநில சர்க்கார்கள் ஏற்குமாம்.

மதிப்பீட்டின்படி ஒரு கல்லூரி அமைக்க ரூ. 80 இலட்சமும், ஆண்டுதோறும் ரூ. 15 இலட்சம் முதல் ரூ. 20 இலட்சம் வரையில் செலவாகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த 5 கல்லூரிகளும் கள்ளிக்கோட்டை, போபால், கான்பூர், ஜாம்நகர், ஜபல்பூர் ஆகிய ஐந்து இடங்களில் ஏற்படுத்தப்படுமாம்.

பிரான்ஸ் சங்கடம்!

சூயஸ் சிக்கலில் தவிப்பு

பாரிஸ், எப். 2—

சட்டபூர்வமாகவோ அல்லது வேறு சிக்கல்களின் காரணமாகவோ சூயஸ் கால்வாயை உபயோகிக்க முடியாவிட்டால் வேறு என்ன செய்வது என்று பிரான்ஸ் யோசித்து வருகிறதாம். ஐ. நா. குழுவிற்கு இந்தப் பிரச்சினையை பிரான்ஸ் கொண்டு போகக்கூடும் என்றும் தெரிய வருகிறது.

படிப்பினைதந்தபாடம்?

சந்திகார், எப். 2—

மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் கூடியவரையில் சிறிய அளவில் இருக்கவேண்டும் என்று மத்திய பார்லிமெண்டரி நிறுவனம் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானதோர் யோசனை கூறியிருப்பதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.